Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House (A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 173 | உள்ளூர் - 22.06.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 173 | வெளியூர் - 23.06.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

கிரகங்கள் சாதகமாக இருந்தும் ஏன் தடைகள்? ஒரு ஜோதிட பார்வை!

12-ம் வகுப்பு; திருச்சி, மதுரை விமான நிலையத்தில் காலியிடங்கள் -தேர்வு இல்லை!

விஷவாயு கசிவு உயிரிழந்தோர் எண்ணிக்கை 7 ஆக உயர்வு...!

கைகோர்க்கும் ஸ்டாலின் - எடப்பாடி? பரபரப்பு!

## முதல்வர் விஜய் பிறந்தநாள்: தலைவர்கள் வாழ்த்து!




சென்னை, ஜூன். 22–

முதல்வர் விஜய்க்கு சமூக வலைதள பதிவு மூலம் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். "தமிழக முதல்வர் விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்துகள். அவரது நீண்ட ஆயுளுக்கும், ஆரோக்கியத்துக்கும் பிரார்த்திக்கிறேன்" என அதில் பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை இன்று (ஜூன் 22) காலை தொடங்கிய போது, சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் முதல்வர் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்தனர். பிறந்தநாள் வாழ்த்துரை உடன் அவை நிகழ்வை சபாநாயகர் ஜே.சி. டி.பிரபாகர் தொடங்கி வைத்தார்.

திமுக தலைவர் ஸ்டாலின், "முதல்வர் ஜோசப் விஜய்க்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள்! தாங்கள் மகிழ்ச்சியோடும், உடல் – உள நலத்தோடும் பொதுவாழ்வில் பணியாற்றிட விழைகிறேன்" என தனது சமூக வலைதள பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, "இந்த இனிய பிறந்தநாள் ஆண்டுதோறும் வெற்றிகரமாகவும், மகிழ்ச்சி கரமாகவும் கொண்டாடப்பட்டு, நீங்கள் எடுக்கின்ற அரசியல் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறவும், எதிர்ப்புக்கள் தவிடு பொடியாகவும், தமிழ் நாட்டினுடைய மேன்மை க்காவும், உயர்வுக்காகவும், வழிகாட்டும் நல்லாட்சி நீங்கள் நடத்திடவும், முழுமையான உடல் நலனோடும், மன நிறைவோடும் பன்னூறு பிறை கண்டு வாழவும் இயற்கைத் தாயின் அருளைப் பிரார்த்திக்கிறேன்" என்று முதல்வர் விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், "தமிழக வெற்றிக் கழகத் தலைவரும், முதல்வருமான விஜயின் 52–ஆம் பிறந்தநாளில், அவருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல உடல் நலத்துடன் நூறாண்டு வாழ்ந்து, பொது வாழ்க்கையில் மக்களுக்கு பணியாற்ற வாழ்த்துகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

## அமோனியா வாயுக் கசிவு விவகாரம்: அமைச்சர் விளக்கத்தின் போது எதிர்க்கட்சிகள் அமளி...!



சென்னை, ஜூன் 22–

திருவள்ளூர் மாவட்டத்தில் தனியார் இறால் பதப்படுத்தும் ஆலையில் ஏற்பட்ட அமோனியா வாயுக் கசிவு சம்பவம் தொடர்பாக சட்டப்பேரவையில் இன்று கடும் விவாதம் எழுந்தது. உயிரிழப்புகள் மற்றும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்ட விவகாரம் குறித்து அமைச்சர் விளக்கம் அளித்தபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக அரசு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதா, ஆலையில் பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்பட்டதா என்பதைக் கேட்டு எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பினர். இதையடுத்து அவையில் சில நிமிடங்கள் பரபரப்பு நிலவியது.

இதற்கு பதிலளித்த அமைச்சர், சம்பவம் குறித்து உடனடியாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை மற்றும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மேலும், ஆலை உரிமையாளர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். அமைச்சரின் விளக்கத்தால் திருப்தியடையாத எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து முழக்கமிட்டதால் அவையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. : மேகதாது அணை விவகாரம் தொடர்பாக சட்டமன்றத்தில் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா விளக்கம் அளித்துள்ளார். மேகதாது விவகாரத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேகதாது அணை விவகாரத்தில் 25 ஆண்டுகளாக சட்டப் போராட்டம் நடத்தி வருகிறோம். மேகதாது விவகாரத்தில் உச்சநீதிமன்ற தீர்ப்பை கடைபிடிக்க வேண்டும்.

# போர் நிறுத்தம் நீடிக்குமா?

# சுவிட்சர்லாந்தில் பரபரப்பு! பேச்சுவார்த்தையை பாதியிலேயே விட்டு

## வெளியேறிய ஈரான்!!



வாஷிங்டன், ஜூன். 22–

அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே போர் நிறுத்தத்தை நீட்டிக்கவும், பிராந்திய அமைதியை நிலைநாட்டவும் சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சுவார்த்தையில் ஈரான் பாதியிலேயே வெளியேறியது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானும் அமெரிக்காவும் போர் நிறுத்தம் மற்றும் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு போரை கைவிடுவதாக அறிவித்தன. ஈரான் போர் முடிவுக்கு வந்ததால் கச்சா எண்ணெய் விலை குறைய தொடங்கியது. ஹார்முஸ் ஜலசந்தியிலும் கச்சா எண்ணெய் போக்குவரத்து தொடங்கியது. இதற்கிடையே சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சுவார்த்தையில் ஈரான் பாதியிலேயே வெளியேறியது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் மத்தியஸ்தர்கள் ஈரானை சமாதானப்படுத்தி மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வந்துள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தான 14 அம்ச புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செயல்படுத்தவும், ஈரானின் அணுசக்தி திட்டம், ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்தை உறுதி செய்தல் மற்றும் லெபனானில் நிலவும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதுமே இந்தப் பேச்சுவார்த்தையின் முக்கிய நோக்கங்களாக இருந்தன. அமெரிக்க துணை அதிபர் ஜே டி வான்ஸ் இதில் பங்கேற்றிருந்தார். பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோது, லெபனானில் உள்ள ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பைக் கட்டுப்படுத்தா விட்டால் ஈரான் மீது கடுமையான தாக்குதல் நடத்தப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சமூக வலைதளத்தில் எச்சரித்தார். இது பேச்சுவார்த்தையில் கடும் பதற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் ஈரான் பேச்சுவார்த்தையில் பாதியில் இருந்தே வெளியேறியது. இத்தனை சவால்களுக்கு மத்தியிலும், கத்தார் மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் மத்தியஸ்தத்துடன் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன. லெபனானில் போர் நிறுத்தத்தை உறுதி செய்ய ஒரு "மோதல் தவிர்ப்பு பிரிவை" உருவாக்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. மேலும், அடுத்த 60 நாட்களுக்குள் இறுதி ஒப்பந்தத்தை எட்ட ஒரு வரைபடத்தை உருவாக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக ஹார்முஸ் ஜலசந்தியில் தடையில்லா கப்பல் போக்குவரத்தை உறுதி செய்வது குறித்து தான் முக்கியமாக விவாதிக்கப்பட்டுள்ளது.

பல தடங்கல்களுக்கு மத்தியில் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் திங்கள்கிழமை அதிகாலையுடன் முடிவடைந்தாலும், தொழில்நுட்ப ரீதியிலான அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகள் இந்த வாரம் முழுவதும் சுவிட்சர்லாந்தில் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.பரஸ்பர நம்பிக்கையின்மை மற்றும் டிரம்ப்பின் கடுமையான எச்சரிக்கைகளுக்கு இடையிலும், இரு நாடுகளும் ஒரு நீண்டகால அமைதி ஒப்பந்தத்தை நோக்கிய முயற்சியில் இறங்கியுள்ளன. இருப்பினும், லெபனானில் நீடிக்கும் மோதல்கள் இந்த ஒப்பந்தத்திற்கு ஒரு முக்கிய தடையாகவே பார்க்கப்படுகிறது.

## சட்டமன்றத்தில் மீண்டும் இரு பிரிவுகளாக செயல்படும் அதிமுக எம்.எல்.ஏக்கள்!





சென்னை, ஜூன். 22–

சட்டமன்ற தேர்தலில் அதிமுக 47 இடங்களில் மட்டுமே வென்று மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது. தேர்தல் தோல்வியால் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக எஸ்பி வேலுமணி, சிவி சண்முகம் ஆகியோர் போர்க்கொடி தூக்கினர். சட்டமன்றத்தில், நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பிலும் தவெகவுக்கு ஆதரவாக 25 அதிமுக எம்.எல். ஏக்கள் வாக்களித்தனர். இதையடுத்து சமரசம் ஏற்பட்டு மீண்டும் எடப்பாடி பழனிசாமி அணிக்கு எஸ்பி வேலுமணி உள்ளிட்ட எம்.எல்.ஏக்கள் திரும்பினர்.

எனினும், சிவி சண்முகம் மட்டும் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். சி விஜயபாஸ்கர், இசக்கி சுப்பையா உள்ளிட்ட 5 எம்.எல். ஏக்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டனர். இவ்வாறாக அதிமுகவில் தொடர்ந்து பரபரப்பு அரங்கேறி வரும் நிலையில்,இன்று சட்டமன்றத்தில் அதிமுக எம்.எல். ஏக்கள் வெளிநடப்பு செய்யும் போது எஸ்பி வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், ரவி மனோகர், ராகேஷ் வெளிநடப்பு செய்யவில்லை இதன் மூலம் சட்டமன்றத்தில் அதிமுக எம்.எல்.ஏக்கள் மீண்டும் இரு பிரிவாக செயல்படுவது தெரியவந்துள்ளது.

**அதிமுக வெளிநடப்பு ஏன்?**

மேகேதாட்டு விவகாரம் தொடர்பான உரிமை மீறல் பிரச்சினையில் பேச அனுமதி அளிக்காத காரணத்தால் இன்று சட்டப்பேரவையில் இருந்து அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். வெளிநடப்பு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, "தமிழக சட்டப்பேரவை விதி 220–ன் கீழ் அதிமுக சார்பாக ஒரு உரிமை பிரச்சினையை அவைக்கு கொண்டுவர அனுமதி கேட்டோம். மேகேதாட்டு தனித் தீர்மானத்தில் இடைச்செருகல் திருத்தம் செய்ததை அவை கவனத்துக்கு கொண்டு வருவது தொடர்பாக சபாநாயகரிடம் கடிதம் கொடுத்திருந்தோம். சபாநாயகர் ஜீரோ ஹவரில் இதுபற்றி பேச அனுமதிக்காத காரணத்தால், நாங்கள் வெளிநடப்பு செய்துள்ளோம்.

**முன்மொழிய வேண்டும்**

மேகேதாட்டு விவகாரத்தில் ஜூன் 18 அன்று சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வரைவு தீர்மானத்தை மட்டும் அதிமுக சார்பில் ஆதரித்தோம். ஜூன் 19ஆம் தேதி சட்டப்பேரவை விதி 104ன் படி முன்மொழியப் படாத, இடைச்செருகல் சேர்க்கப்பட்ட திருத்திய தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை. பேரவை விதி 104–ன் கீழ் உறுப்பினர்களுக்கு அனுப்பிய வரைவு தீர்மானத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டுமானால், அரசின் சார்பான திருத்தங்கள் முறையாக அவைக்கு தெரிவிக்கப்பட்டு வரைவில் உள்ள தீர்மானத்துக்கு பதிலாக திருத்தப்பட்ட தனித் தீர்மானத்தை மொழிவதற்கு சபாநாயகரின் அனுமதி பெற்று, திருத்தப்பட்ட தீர்மானத்தை பேரவையில் முன்மொழிய வேண்டும். இதனையே சட்டப்பேரவையில் உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டு வந்தோம்.

**விதிகளுக்கு புறம்பாக**

விதிகளுக்கு புறம்பாக திருத்தத்தை முதல்வரின் பதில் உரையில் சேர்த்துள்ளார். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. ஒரு தனித் தீர்மானம் ஜூன் 18ல் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. அதன்பின்னர் விவாதம் நடைபெற்றது. பிறகு முதல்வரின் பதிலுரையில் இந்த இடைச்செருகல் திருத்தத்தை சேர்த்துள்ளார்கள். எனவே, விதிகளின் படி அவர்கள் இந்த தீர்மானத்தை கொண்டு வரவில்லை என்பதை தெரிவிக்கவே நாங்கள் இந்த உரிமை மீறல் பிரச்சினையை கொண்டுவந்தோம். அதற்கு சபாநாயகர் அனுமதிக்க வில்லை என்பதால் அதிமுக வெளிநடப்பு செய்துள்ளது.



தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 22.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 08-ம் தேதி

# திருமண உறவில் பாலியல் வன்கொடுமை!




இந்தியாவில் திருமண உறவுக்குள் நடக்கும் பாலியல் வன்கொடுமை (Marital Rape) குறித்த விவாதங்கள் சமூக வலைதளங்களில் தற்போது அனல் பறக்கின்றன. கணவன்–மனைவி இடையிலான சம்மதம் மற்றும் பாதுகாப்பு குறித்து நெட்டிசன்கள் தீவிரமாக விவாதித்து வருகின்றனர். சட்டத் திருத்தங்கள் குறித்த பேச்சுகள் எழுந்துள்ள நிலையில், தற்போதைய சட்டங்கள் பெண்களுக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன என்ற கேள்வி பலரிடமும் எழுந்துள்ளது. தார்மீக உரிமைகள் குறித்த தெளிவான புரிதல் அவசியமாகியுள்ள சூழலில், தற்போதைய சட்ட நடைமுறைகளைத் தெரிந்துகொள்வது மிகவும் முக்கியம்.

தற்போதைய இந்திய சட்டப்படி, திருமணத்திற்குப் பிறகு கணவன் மனைவியுடன் கட்டாயப்படுத்தி கொள்வது குற்றமாக கருதப்படுவதில்லை. பாரதிய நியாய சன்ஹிதாவின் (BNS) பிரிவு 63–ன் கீழ் இதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதாவது, 18 வயதுக்கு மேற்பட்ட மனைவியுடன் கணவன் கொள்ளும் உறவு 'பாலியல் வன்கொடுமை' என்ற வரம்பிற்குள் வராது. இந்த விதியைப் பற்றித்தான் நாடு முழுவதும் பெரிய விவாதமே நடக்கிறது. ஒருவரின் சம்மதம் என்பது திருமணத்திற்குப் பிறகும் மிக முக்கியம் என சமூக ஆர்வலர்கள் வாதிடுகின்றனர்.

Recent Developments in the Marital Rape Law குற்றவியல் ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியாவிட்டாலும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிவில் சட்டங்களின் கீழ் தீர்வுகள் உள்ளன. குறிப்பாக, குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பெண்கள் பாதுகாப்பு கோர முடியும். இந்தச் சட்டத்தின் பிரிவு 3–ன் படி, பாலியல் ரீதியான துன்புறுத்தல்களும் வன்முறை என்றே வரையறுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்றத்தை அணுகி பாதுகாப்பு உத்தரவுகளையோ அல்லது தங்குமிட உரிமையையோ பெற முடியும். இது பெண்களுக்கு ஒரு முக்கியமான பாதுகாப்பு அரணாகத் திகழ்கிறது. திருமண உறவில் பாலியல் வன்கொடுமைக்கு அளிக்கப்பட்டுள்ள சட்ட விலக்கை எதிர்த்து தொடரப்பட்ட மனுக்களை உச்ச நீதிமன்றம் தற்போது விசாரித்து வருகிறது. இந்தச் சட்ட விலக்கு அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது எனப் பல தரப்பிலும் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு, திருமண உறவில் 'சம்மதம்' என்பதைப் பார்க்கும் விதத்தையே மாற்றக்கூடும். இது சட்ட ரீதியான பெரிய மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என நிபுணர்கள் கருதுகின்றனர். அதுவரை, இந்த விவகாரம் குறித்த விவாதங்கள் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

இவங்கதான் சட்ட ரீதியான தீர்வு முதன்மை சட்டம் முக்கிய பயன் சிவில் தீர்வு குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2005 பாதுகாப்பு உத்தரவுகள் அவசர உதவி உதவி எண் 181 உடனடி ஆதரவு பாதிக்கப்பட்ட பெண்கள் 181 மற்றும் 1091 ஆகிய தேசிய உதவி எண்களைத் தொடர்புகொண்டு உடனடி உதவியைப் பெறலாம். இந்தச் சேவைகள் இக்கட்டான சூழலில் இருக்கும் பெண்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களையும் அவசர உதவிகளையும் வழங்குகின்றன. எதிர்காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டால், நடந்த சம்பவங்களை ஆதாரங்களுடன் குறித்து வைத்துக்கொள்வது நல்லது என நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர். விழிப்புணர்வுடன் இருப்பதே பாதுகாப்பிற்கான முதல் படி. இந்தியாவில் நீதிக்கான பயணம் தொடர்ந்து பரிணாமம் அடைந்து வருவதையே இந்த சட்டப் போராட்டங்கள் காட்டுகின்றன.

# சட்டசபையில் பட்ஜெட் தாக்கலுக்கு பிறகு மஞ்சள் கார்டு குடும்ப தலைவிகளுக்கு ரூ.1000 உரிமை தொகை!



புதுச்சேரி, ஜூன். 22–

புதுவை சட்டசபை தேர்தலுக்கு முன்பாகவே, என். ஆர்.காங்கிரஸ் – பா.ஜ.க., கூட்டணி அரசு சிவப்பு ரேஷன் கார்டு வைத்துள்ள குடும்ப தலைவிகளுக்கு உரிமை தொகையை அதிரடியாக ரூ ஆயிரத்தில் இருந்து ரூ 2 ஆயிரம் 500 ஆக உயர்த்தியது.

அதே வேளையில், மஞ்சள் ரேஷன் கார்டு வைத்துள்ள குடும்ப தலைவிகளுக்கும் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கப்படும் என முதல்–அமைச்சர் ரங்கசாமி சட்டசபையில் அறிவித்திருந்தார். ஆனால், கடந்த ஆட்சியில் இதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

இதனால் தேர்தலுக்கு பிறகு மீண்டும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஆட்சி பொறுப்பேற்றதும், தனது வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக திட்டத்திற்கான கோப்பினை முதல்–அமைச்சர் ரங்கசாமி நித்துறைக்கு அனுப்பி வைத்தார். நித்துறை அதிகாரிகள் இந்த கோப்பினை பரிசீலித்த பின், போதிய நிதி ஆதாரம் இல்லாததை சுட்டிக்காட்டி மீண்டும் முதல் அமைச்சருக்கே தற்போது திருப்பி அனுப்பியுள்ளனர். மேலும் முதல்– அமைச்சரை நேரில் சந்தித்தும் அதிகாரிகள் நிதி நெருக்கடி குறித்து விளக்கமளித்தனர்.

புதுச்சேரியில் வேறு எந்த அரசு நலத்திட்ட உதவிகளையும் பெறாத, 1 லட்சம் மஞ்சள் ரேஷன் கார்டு குடும்ப தலைவிகள் இந்த திட்டத்தின் கீழ் பயனாளர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மாதம் ரூ 1,000 வீதம் வழங்கினால், மாதத்திற்கு ரூ 10 கோடி என ஆண்டிற்கு ரூ. 120 கோடி கூடுதல் நிதி தேவைப்படுகிறது.

இந்த திட்டத்தை மகளிர் மேம்பாட்டு துறை மூலமாகவே செயல்படுத்த வேண்டும். ஏற்கனவே சிவப்பு கார்டுதாரர்களுக்கான தொகை உயர்வு உள்ளிட்ட திட்டங்களால், துறையின் பட்ஜெட் ரூ 220 கோடியாக அதிகரித்துள்ளது.

இப்போது மஞ்சள் கார்டுதாரர்களின் திட்டத்தையும் சேர்த்தால் மகளிர் மேம்பாட்டு துறையின் ஆண்டு செலவு ரூ.340 கோடியாக உயரும். ஆனால், தற்போதைய பட்ஜெட்டில் அவ்வளவு தொகை இல்லை என அதிகாரிகளின் தெரிவித்துள்ளனர்.

ஆகஸ்ட்டு மாதம் தாக்கல் செய்யவுள்ள பட்ஜெட்டில் திட்டத்திற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, அதன்பின் முழுமையாகச் செயல்படுத்தலாம் என்றும் மஞ்சள் கார்டு வைத்திருப்பவர்களில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு மட்டும். ரூ 1000 வழங்கும் திட்டத்தை உடனடியாகத் தொடங்கலாம்.

இதற்கு மாதத்திற்கு ரூ.5 கோடி மட்டுமே செலவாகும் என்பதால், தற்காலிகமாக இந்த மாற்றுப்பாதையைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

கோப்பு திரும்பிய போதிலும், தகுதி வாய்ந்த அனைத்து மஞ்சள் கார்டு இல்லத்தரசிகளுக்கும் ரூ.1,000 வழங்க வேண்டும் என்பதில் முதல்–அமைச்சர் ரங்கசாமி உறுதியாக உள்ளார். இதன் காரணமாக, மாற்று திட்டங்கள் மற்றும் நிதி திரட்டும் வழிகள் குறித்து தீவிர ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு மீண்டும் இறுதி ஒப்புதலுக்காக நிதித்துறைக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. இதனால், சட்டசபையில் முழுமையான பட்ஜெட் தாக்கலின் போது திட்டத்திற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்து மஞ்சள் கார்டு குடும்ப தலைவிகளுக்கு ரூ.1,000 உரிமை தொகை வழங்கப்படும் என தெரிகிறது.

# விஷவாயு கசிவு; உயிரிழந்தோர் எண்ணிக்கை 7 ஆக உயர்வு...!




திருவள்ளூர், ஜூன். 22–

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம் அருகே கன்னிகைபேர் கிராமத்தில் தனியார் மீன் உணவு ஏற்றுமதி தொழிற்சாலையின் உற்பத்தி பிரிவில் எதிர்பாராத விதமாக அம்மோனியா வாயு கசிவு ஏற்பட்டதில், அங்கு பணியில் இருந்த 64 நபர்கள் (60 பெண்கள், 4 ஆண்கள்) பாதிக்கப்பட்டனர்.

2 பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், அமோனியா வாயுக் கசிவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் ஜோசப் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளதுடன் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணமாக வழங்கவும் உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து தொழிலக பாதுகாப்பு, சுகாதாரத்துறை இயக்குநர்கள் தலைமையில் விசாரணை குழுவை அமைத்து உத்தரவிட்டுள்ள தமிழ்நாடு அரசு, 24 மணி நேரத்திற்குள் இடைக்கால அறிக்கை மற்றும் 3 நாட்களுக்குள் இறுதி அறிக்கையையும் சமர்ப்பிக்க அறிவுறுத்தியுள்ளது. மேலும் இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வெளிமாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் என்பதால் உடல்களை சொந்த மாநிலத்திற்கு அனுப்பி நல்லடக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு செலவில் மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

# அரசியல் கட்சியாகிறது 'வி தி லீடர்ஸ்'; தேர்தலில் போட்டியிட திட்டம்!




திருநெல்வேலி, ஜூன். 22–

'வி தி லீடர்ஸ்' அமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எதிர்காலத்தில் தேர்தல்களில் போட்டியிடவும் திட்டமிட்டுள்ளோம் ''என அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன் கூறினார்.

திருநெல்வேலியில் அவர் கூறியதாவது: போதை கலாசாரத்திற்கு எதிராக ஜூலை 19–ம் தேதி திருச்செந்தூரில் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதில் அண்ணாமலை பங்கேற்கிறார். எங்கள் அமைப்பு எந்த அரசியல் கட்சிக்கும் பினாமி அமைப்பு அல்ல. தமிழர்களை முன்னிறுத்தி தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

தமிழக வெற்றி கழக அரசு செயல்படுத்தி வரும் சில திட்டங்களை வரவேற்கிறோம். குறிப்பாக இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளித்து இளம் அமைச்சர்களை நியமித்திருப்பது பாராட்டத்தக்கது. அதேநேரத்தில் தமிழக வெற்றி கழகத்திற்கும் திராவிட கட்சிகளுக்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாக தெரியவில்லை.

தற்போது அமைப்பை வலுப்படுத்தும் பணிகளில் கவனம் செலுத்தி வருகிறோம். 'வி தி லீடர்ஸ்' அமைப்பை விரைவில் அரசியல் கட்சியாக பதிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்காலத்தில் உள்ளாட்சித் தேர்தல், லோக்சபா தேர்தல், சட்டசபை தேர்தல்களில் போட்டியிட திட்டமிட்டுள்ளோம். எதிர்கால அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப கூட்டணி குறித்து முடிவு செய்யப்படும். தமிழக அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக 'வி தி லீடர்ஸ்' உருவெடுக்கும் என்றார்.

# முதல்வர் விஜய் பிறந்தநாள், அமைச்சர் ம.விஜய்பாலாஜி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!



ஈரோடு, ஜூன். 22–

தமிழ்நாடு முதலமைச்சர் சி ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் ஈரோடு மரப்பாலம் பகுதி கழக செயலாளர் சாதிக் பாட்ஷா ஏற்பாட்டில் 500க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி கலந்து கொண்டு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மேற்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஆனந்த் மோகன், மாநகர செயலாளர் எஸ் ஏ எப். அக்கிம், முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் எச் எம். ஜாபர் சாதிக், வீரா செந்தில்குமார், பெரியார் நகர் பகுதி இணைச் செயலாளர் அறிவரசன் உள்ளிட்ட ஏராளமான தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அரசு பள்ளிகளில் 18,107 ஆசிரியர் காலி பணியிடங்கள்; பள்ளிக்கல்வித்துறை தகவல்!




சென்னை, ஜூன். 22–

ஆசிரியர் பணிகளில் காலி இடங்கள் அரசு பள்ளிக்கூடங்களில் தொடர்ந்து நீடித்து வருவதை பார்க்க முடிகிறது. அந்தவகையில் ஜூன் மாதம் 11–ந்தேதி வரையிலான நிலவரப்படி, ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 14 ஆயிரத்து 248 ஆக இருக்கும் நிலையில், அதில் 96 ஆயிரத்து 141 இடங்கள் நிரப்பப்பட்டு, 18 ஆயிரத்து 107 இடங்கள் காலியாக இருப்பது பள்ளிக்கல்வித்துறையின் புள்ளிவிவரங்களில் தெரிய வந்துள்ளது. இந்த புள்ளி விவரங்களில் அதிகபட்சமாக பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள்தான் இருக்கின்றன. அதில் 7,252 இடங்கள் இருப்பதாக சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்கடுத்தபடியாக 2,833 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு பள்ளியை வழிநடத்தக்கூடிய தலைமை ஆசிரியர் பணியிடங்கள் 1,214 என்ற எண்ணிக்கையில் காலியாக இருக்கிறது. அதிகபட்சமாக திருவண்ணாமலை மாவட்டத்தில் 93 என்ற எண்ணிக்கையில் காலி இடங்கள் இருக்கின்றன.

குறிப்பிட்ட பாடத்திற்கு ஆசிரியர்கள் இல்லாதபோது, மாணவர்கள் அந்தப் பாடத்தின் அடிப்படை தத்துவங்களைப் புரிந்துகொள்ள முடியாமல் திணறுவார்கள். காலியாக உள்ள பணியிடங்களால், பணியில் இருக்கும் மற்ற ஆசிரியர்கள் கூடுதல் வகுப்புகளையும், பிற பாடங்களையும் கவனிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதனால் அவர்களுக்கு மன அழுத்தமும், பணிச்சுமையும் கூடும். எனவே பள்ளிக்கல்வித்துறை இதில் தீவிர கவனம் செலுத்தி காலி இடங்களை நிரப்ப வேண்டும் என்பது கல்வியாளர்கள், ஆசிரியர் சங்கங்கள். பெற்றோரின் கோரிக்கையாக இருக்கிறது.



# கிரகங்கள் சாதகமாக இருந்தும் ஏன் தடைகள் ஏற்படுகின்றன? ஒரு ஜோதிட பார்வை...!




ஒருவருடைய ஜனன கால ஜாதகம் அவருடைய தலைவிதியையும், அதில் உள்ள கிரகங்களின் தாக்கத்தையும் ராசிகள் மீது பிரதிபலிக்கும். அதே வேளையில், வாஸ்து சாஸ்திர பலனை பொருத்தவரையில் ஒருவர் வசிக்கக்கூடிய வீட்டின் ஆற்றலை பிரதிபலிக்க கூடியதாக இருக்கும். அதாவது ஒருவருடைய ஜாதகத்தில் கிரக நிலைகள் சாதகமாக இருந்தும், அவருடைய செயல்பாடுகள் அல்லது செல்வ செழிப்பில் குறை ஏற்பட, அவர் மிகவும் குறைபாடுள்ள பண்புகளைக் கொண்ட வீட்டில் வசிக்கக்கூடிய அமைப்பால் ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டு. அதனால் ஒருவருடைய ஜாதகம் அடிப்படையில் ஜோதிட பரிகாரங்கள் செய்த பிறகும், வாஸ்து குறைபாடுகளால் ஏற்படும் தடைகள் நீடித்தால், அவருடைய ஜாதகத்துடன் வாஸ்து அமைப்புகளையும் ஆராய்வது அவசியம்.

**ஜாதகம் மற்றும் வாஸ்து:**

ஒருவர் நல்ல வாஸ்து உள்ள கட்டிடத்தில் வசித்தாலும், அவருடைய பிறப்பு ஜாதகத்தில் சில கடினமான யோகங்கள் இருப்பின், அதன் விளைவாக அவருக்கு கிரக பெயர்ச்சி ரீதியாக நல்ல சூழல் இருந்தாலும் சில கடினமான விஷயங்களை அனுபவிக்க நேரிடும். எனவே ஜோதிடத்தில் நன்கு கற்றறிந்த வல்லுநர்கள் பிரச்சினைகளை தீர்க்க, வாஸ்து உடன் பிறப்பு ஜாதகத்தையும் சேர்த்து ஆராய்வது அவர்களுடைய குடும்பத்தில் நிம்மதியான சூழலையும், அவர்கள் செய்யக்கூடிய தொழில், வேலை போன்ற விஷயங்களை வலுவான நன்மைகளை தரக்கூடியதாக இருக்கும்.

**தொழில் செய்யும் இடம் அல்லது பணியிடம்:**

ஒருவர் ஏதேனும் சுயதொழில் அல்லது வியாபாரம் செய்யக்கூடிய நபராக இருப்பின் அவருடைய பணியிடத்தில் வடக்கு திசை அமைப்பில் சில குறைபாடுகள் அல்லது தென்கிழக்கு மூலையில் கடுமையான குறைபாடு இருப்பின் அவருடைய வணிகத்தில் எதிர்பார்த்த லாபத்தை அல்லது முன்னேற்றத்தை அடைவதில் மிகவும் சிரமங்களையும், தாமதத்தை சந்திக்க நேரிடலாம். அதனால் அவர் தொழில் செய்யக்கூடிய இடத்தில் மாற்ற அமைப்பு சரியாக இருந்து, அவருடைய ஜாதகமும் ஒத்துழைத்தால் அவர் எடுக்கக்கூடிய முயற்சிகளில் மிகவும் சாதகமாக சூழலை பெறுவார்.

**திசைகள் தரும் நன்மைகள்:**

வாஸ்து சாஸ்திரத்தின் படி முதன்மையாக கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு உள்ளிட்ட எட்டு திசைகளையும் அவற்றின் உப திசைகளையும் ஆராய்கிறது. இதன் அடிப்படையில் ஒரு கட்டிடத்தின் சமையலறை, படுக்கை அறை, பூஜை அறை, பிள்ளைகள் படிக்கும் வரை, நீர் தேக்கி வைக்கும் இடம், தண்ணீர் தொட்டி, போன்ற விஷயங்கள் சரியான முறையில் அமைப்பதை குறிக்கிறது.

வாஸ்துவின் அடிப்படையில், ஒரு நிலத்தை அல்லது கட்டிடத்தின் எந்த பகுதியை எந்த நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்பதை சரியாக நாம் பின்பற்றி செயல்பட்டால், அந்த திசைகளுக்கான கிரகங்களின் அமைப்புகளும் உதவக்கூடியதாக இருக்கும். ஏனெனில் கிரகங்களின் இயற்கையான நன்மை மற்றும் தீமைகளை கருத்தில் கொண்டு வாஸ்து சாஸ்திர விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வாஸ்து சாஸ்திரத்தை எளிமையாக குறிப்பிட வேண்டும் எனில், பல்வேறு திசைகளையும் அவற்றுக்கான கிரகங்கள் மற்றும் கிரகங்களின் தாக்கங்களுக்கு ஏற்ப அதில் வசிக்கக்கூடிய அல்லது பணியாற்றக்கூடிய நபர்களின் செயல்பாடு இருக்கும். வாஸ்து அமைப்பு சரியில்லாத இடத்தில் கிரகங்களின் இயற்கைக்கு முரணான பலன் தரக்கூடிய அமைப்பு ஏற்படும் என்பதால் எதிர்மறை விளைவுகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இது பிரச்சனைகளை உண்டாக்கி அவருடைய வாழ்க்கையில் தொந்தரவுகளை தரும். அதனால் அவருடைய சுயஜாதகத்தின் நல்ல பலனை கூட தடுக்க வாய்ப்பு உண்டு.

# சதுரகிரி மலையில் தினந்தோறும் மலையேற தடை!




சதுரகிரி, ஜூன். 22–

ஸ்ரீவில்லிபுத்தூர் சதுரகிரி மலையில் உள்ள சுந்தர மகாலிங்கம் திருக்கோயிலுக்கு தினம்தோறும் மலையேற இன்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தினந்தோறும் பக்தர்கள் மலையேறி சாமி தரிசனம் செய்து வந்த நிலையில், உயர் நீதிமன்ற உத்தரவுப்படி பக்தர்கள் தினந்தோறும் மலையேறி சாமி தரிசனம் செய்ய இன்று முதல் தடை அமலுக்கு வந்தது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## தினமும் யோகா!



யோகா என்பது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்த செய்யக்கூடிய ஒருவிதமான பயிற்சியாகும். இது இந்தியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாக பயிற்சி செய்யப்பட்டு வருகிறது. இந்த யோகா உடலுக்கு ஏராளமான நன்மைகளை வழங்கக்கூடியது. இதை ஒருவர் தினமும் பயிற்சி செய்து வந்தால், ஆரோக்கியமான வாழ்க்கையை வாழலாம். மேலும் கண்டறிக Health இந்த யோகா பயிற்சியின் அவசியத்தை உணர்த்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21 ஆம் தேதி சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. அதுவும் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருபொருள் அடிப்படையில் இந்த யோகா தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டின் கருபொருள் "ஆரோக்கியமான முதுமைக்கான யோகா" (Yoga For Healthy Ageing) என்பதாகும்.

தற்போதைய காலகட்டத்தில் யோகாசனங்களை ஒருவர் தினமும் தவறாமல் செய்ய வேண்டும். ஏனெனில் அந்த அளவில் ஆரோக்கிய பிரச்சனைகளானது அதிகரித்துள்ளது. இதைத் தவிர்க்கவும், கட்டுப்படுத்தவும் நினைத்தால், யோகாசனங்கள் பெரிதும் உதவி புரியும். இப்போது யோகாசனங்களை ஒருவர் தினமும் செய்து வந்தால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பது குறித்து காண்போம்.

1. மன அழுத்தம் மற்றும் பதட்டம் குறையும் தற்போது மன அழுத்தத்தினால் தான் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மன அழுத்தத்தில் இருந்து நிவாரணம் அளிக்க யோகாசனங்கள் பெரிதும் உதவி புரியும். சொல்லப்போனால் யோகாசனங்களால் பெறக்கூடிய முக்கியமான நன்மைகளுள் முதன்மையானது இது தான். யோகாவில் சுவாசப் பயிற்சிகள், தியானம் மற்றும் உடல் அசைவுகளும் அடங்கியுள்ளன. ஆய்வுகளும் யோகாசனங்களை செய்வது உடலின் மன அழுத்த ஹார்மோனான கார்டிசோலைக் குறைக்க உதவுவதாக கூறுகின்றன. எனவே தினமும் யோகா பயிற்சியை மேற்கொண்டு, உடலையும், மனதையும் ரிலாக்ஸாக வைத்துக் கொள்ளுங்கள்.

2. நெகிழ்வுத்தன்மையும், உடல் வலிமையும் அதிகரிக்கும் யோகாசனங்களை செய்யும் போது, உடலில் உள்ள பல்வேறு தசைகள் நீட்டப்படுகின்றன. இப்படி தொடர்ந்து செய்யும் போது உடல் அதிக நெகிழ்வுத்தன்மை அடைகிறது. அதுவும் புஜங்காசனம், வீரபாசனம் போன்ற ஆசனங்கள் தசைகளை வலுப்படுத்துவதோடு, உடலின் இயக்கத்தையும் மேம்படுத்துகின்றன. மேலும் யோகாசனங்களை தொடர்ந்து செய்பவர்களுக்கு தசை வலிமையடைவதோடு, உடல் தோரணை மற்றும் சமநிலையில் முன்னேற்றம் ஏற்படுவதாக ஆய்வுகளிலும் தெரிய வந்துள்ளன.

3. இதயத்திற்கு நல்லது யோகாசனங்கள் இதய ஆரோக்கியத்திற்கும் நன்மைகளை வழங்குகின்றன. அதுவும் உடலில் உள்ள கெட்ட கொழுப்பை குறைககவும், உடலில் இரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும், இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும் யோகாசனங்களை வல்லுநர்கள் பயன்படுத்துகின்றனர். அதுவும் தீவிரமான யோகா மற்றும் சுவாச பயிற்சிகள் இரத்த நாளங்களை தளர்த்தி, உடல் முழுவதும் இரத்த ஓட்டத்தை அதிகரித்து, இதயத்தின் மீதான அழுத்தத்தைக் குறைக்க உதவுகின்றன. இதன் விளைவாக இதய நோயின் அபாயம் குறைகிறது.

4. உடல் எடை கட்டுப்பாட்டில் இருக்கும் யோகாவின் மூலம் உடல் எடையை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும். தீவிரமான உடற்பயிற்சியைப் போல் உடல் எடையைக் குறைக்க முடியாவிட்டாலும், அசைவுகளின் மூலம், கெட்ட கொழுப்புக்கள் கரைத்து, தசைகளை வலுவடையச் செய்யும். அதுவும் சில ஆற்றல்மிக்க யோகாசனங்கள் உடலின் மெட்டபாலிசத்தை அதிகரித்து, உடலை வலுப்படுத்துகிறது. முக்கியமாக யோகாவை தினமும் செய்து வந்தால், மன அழுத்தத்தால் அதிகம் உணவு உட்கொள்வது தடுக்கப்பட்டு, அதன் மூலம் உடல் எடை அதிகரிப்பது தடுக்கப்படுகிறது.

5. ஆழமான தூக்கத்திற்கு உதவும் தற்போது தூக்கமின்மையால் பலர் அவதிபடுவதற்கு முக்கிய காரணம் மன அழுத்தமும், ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையும் தான். ஆனால் யோகா நரம்பு மண்டலத்தை ஒருமுகப்படுத்தி, உடலை ரிலாக்ஸடைய செய்வதால், நல்ல நிம்மதியான தூக்கத்தைப் பெற உதவுகிறது. ஆய்வுகளிலும் யோகா நல்ல தூக்கத்தைப் பெற உதவுவது குறித்து நிரூபிக்கப்பட்டுள்ளன.

எனவே நண்பர்களே! இதுவரை யோகாசனங்களை செய்யாமல் இருந்திருந்தால், இனிமேல் தினமும் யோகாசனங்களை செய்து, உடலையும், மனதையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள்.

# இங்கிலாந்து பிரதமர் பதவியில் இருந்து கெய்ர் ஸ்டார்மர் விலக முடிவு!



லண்டன், ஜூன் 22–

பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் ஜூன். 22 (திங்கட்கி ழமை) தனது ராஜினாமாவை அறிவிக்கக்கூடும் என்று ஊடகங்களில் பரவலாக செய்திகள் வெளியாகி வருகின்றன. இருப்பினும், அவரது அலுவலகம் இதை அதிகாரப்பூர்வமாக இன்னும் உறுதிப்படுத்தவில்லை. சமீபத்திய உள்ளாட்சித் தேர்தல்களில் ஏற்பட்ட பெரும் தோல்வி மற்றும் அவரது சொந்த கட்சியைச் சேர்ந்த மூத்த மந்திரிகள் பலர், அவரை பதவியிலிருந்து விலகக் கோரி அழுத்தம் கொடுத்து வரும்நி லையில் அவர் பதவிவிலகுவார் என தெரிகிறிது. மான்செஸ் டர் மேயர் ஆண்டி பர்ன்ஹாம் அடுத்த பிரதமராவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சென்னை - பெங்களூரு உள்பட மேலும் 7 புல்லட் ரெயில் வழித்தடங்களுக்கு அனுமதி!




சென்னை, ஜூன். 22–

இந்தியாவில் அதிவேக ரெயில் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேலும் 7 புதிய புல்லட் ரெயில் வழித்தடங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள வழித்தடங்களில் மும்பை–புனே, பெங்களூரு–சென்னை, பெங்களூரு–ஐதராபாத், புனே–ஐதரா பாத், டெல்லி–லக்னோ, டெல்லி–வாரணாசி மற்றும் டெல்லி–சிலிகுரி ஆகியவை அடங்கும்.இந்தத் திட்டங்கள் நிறைவேறும்போது, முக்கிய நகரங்களுக்கு இடையிலான பயண நேரம் கணிசமாகக் குறையும். குறிப்பாக, மும்பை–புனே இடையே 48 நிமிடங்க ளிலும், பெங்களூரு–சென்னை இடை யே 73 நிமிடங்களிலும் பயணிக்க முடியும். நாட்டின் முதல் புல்லட் ரெயில் திட்டமான மும்பை பாத் ரெயில் பாதை பணிகள் மிக வேகமாக நடந்து வருகின்றன. இது அடுத்த ஆண்டு (2027) பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.இந்தநிலையில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேலும் 7 புதிய புல்லட் ரெயில் வழித்தடத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இந்த அறிவிப்பு இந்திய போக்குவரத்து கட்டமைப்பில் புதிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது. இதனை மத்திய ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் உறுதிப்படுத்தி யுள்ளார். சென்னை– பெங்களூரு புல்லெட் ரெயில் சென்னை சென்டிரலில் தொடங்கி பூந்தமல்லி, பரந்தூர் புதிய விமான நிலையம், சித்தூர், கோலார் வழியாக பெங்களூருவின் பையப்பனஹள்ளி மற்றும் ஒயிட்பீல்டு ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் அமைய வாய்ப்புள்ளது. பெங்களூரு நகருக்குள் நுழையும்போது போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க ஒயிட்பீல்டு முதல் பையப்பனஹள்ளி வரை சுமார் 12 கி.மீ தூரத்திற்கு நிலத்தடி சுரங்கப்பாதை வழியாக இந்த ரெயில் இயக்கப்பட உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

மும்பை, புனே, ஆமதாபாத், சூரத் மற்றும் ஐதராபாத் போன்ற நகரங்கள் ஒரே பொருளாதாரச் சூழலுக்குள் கொண்டு வரப்படும். இத்திட்டங்கள் இந்தியாவின் பயண அனுபவத்தை மாற்றியமைப்பதோடு, தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியை வேகப்ப டுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இந்த புல்லட் ரெயில் திட்டம் பயன்பாட்டுக்கு வரும் பட்சத்தில், சென்னை மற்றும் பெங்களூரு ஆகிய இரு மாநகரங்களும் வணிக ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் இன்னும் மேலும் வளர்ச்சி அடையும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# அ.தி.மு.க.,வில் மீண்டும் சசிகலா, தினகரன்?




சென்னை, ஜூன். 22–

அ.தி.மு.க.,வில் இருந்து பிரிந்தவர்கள், நீக்கப்பட்ட வர்களை, மீண்டும் இணைப்ப தற்கான ரகசிய பேச்சு, அக்கட்சியின் பொதுச்செ யலர் பழனிசாமி தரப்பில் தொடங்கப்பட்டு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அ.தி.மு.க., நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: சட்டசபை தேர்தல் தோல்விக்கு பின், அ.தி.மு.க.,வை பலப்படுத்த கட்சி மேலிடம் முடிவு செய்துள்ளது. தென் மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்ட நிர்வாகிகள் பலர், 'இடைத்தேர்தலுக்கு முன், அ.தி.மு.க.,வை பலப்படுத்த வேண்டும்; அ.ம.மு.க., பொதுச்செயலர் தினகரன், சசிகலா போன்றோரை மீண்டும் கட்சியில் இணைக்க வேண்டும்' என, பழனிசாமியிடம் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

'அ.தி.மு.க., ஒன்றிணைய வேண்டும். மீண்டும் பழனிசாமி முதல்வராக வேண்டும்' என வலியுறுத்தி, தஞ்சாவூர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க., நிர்வாகி மகேந்திரன் தீக்குளித்து மரணம் அடைந்த பின், பழனி சாமி மனமும் மாறியுள்ளது.

பிரிந்தவர்களை மீண்டும் சேர்க்க, மூத்த தலைவர் ஒருவரின் வாயிலாக ரகசிய பேச்சு தொடங்கப்பட்டு உள்ளது. சென்னை போயஸ் கார்டனில் உள்ள சசிகலா வீட்டில், சசிகலாவின் சகோதரர் திவாகரன், அவரது மகன் ஜெய் ஆனந்த் மற்றும் சசிகலா ஆதரவா ளர்கள் ஆலோசனை நடத்தி னர். அ.தி.மு.க.,வில் இணைந்தால், சசிகலாவுக்கு அவைத்தலைவர் பதவி வழங்க வேண்டும் என, அவரது ஆதரவாளர்கள் விருப்பம் தெரிவித்து உள்ளனர்.

அ.ம.மு.க., பொதுச்செயலர் தினகரன் அ.தி.மு.க.,வில் இணைய வேண்டும் என்றால், அவருக்கு துணை பொதுச்செயலர், ராஜ்யசபா எம்.பி., பதவி வழங்க வேண்டும் என, அவரது ஆதரவாளர்கள் நிபந்தனை விதித்துள்ளனர். இதை தொடர்ந்து, அ.தி.மு.க.,வில் ஆறு துணை பொதுச்செயலர் பதவி ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அ.தி.மு.க., நிர்வாகிகளில் 35 வயதுக்கு கீழ் யாரும் இல்லை. எனவே, இளைஞர்களை கட்சியில் சேர்க்க, வியூகம் வகுக்கப்படுகிறது. இடைத்தேர்தலில் இரண்டு தொகுதிகளில் அ.தி.மு.க., வெற்றி பெற்றாலே, கட்சியினர் த.வெ.க., செல்வது தடுக்கப்படும். எனவே, அ.தி.மு.க., வெற்றி பெற, இணைப்பு அவசியம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# கைக்கோர்க்கும் ஸ்டாலின் - எடப்பாடி? பரபரப்பு!




சென்னை, ஜூன். 22–

2026 சட்டமன்ற தேர்தல் முடிந்ததில் இருந்து தமிழக அரசியல் களம் பரபரப்பாகவே இருந்து வருகிறது. தேர்தலில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் 107 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. ஆனால் ஆட்சி அமைக்க கூடுதலாக 11 இடங்கள் தேவைப்பட்டதால் அவர்கள் பதவியேற்க ஒரு வார காலம் ஆனது. இந்த இடைபட்ட நாட்களில் திமுக மற்றும் அதிமுக கூட்டணி ஆட்சி அமைக்க பேச்சுவார்த்தை நடந்தது. இது தமிழகத்தையே அரசியல் நகர்வுகளை திரும்பி பார்க்க வைத்தது.

**பரபரப்பை ஏற்படுத்திய ஆர்.எஸ். பாரதி கருத்து**

இந்த நிலையில், அந்த பேச்சு தற்போது சூடுபிடித்து ள்ளது. அதாவது விஜய்யின் தவெகவை எதிர்க்க இரு பெரும் கட்சிகளும் இணைய முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் கசிந்து வருகி ன்றன. இந்த பரபரப்புக்கு ஒரு வகையான காரணமாக திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி வெளியிட்டுள்ள கருத்து.

அவர், "அதிமுக ஒன்றும் தீண்டத்தகாத கட்சி அல்ல. பல்வேறு காலகட்டங்களில் கம்யூனிஸ்ட் கட்சிகளே அதிமுகவுடன் கூட்டணி அமைத்திருக்கின்றனர். திமுகவும் அதிமுகவும் கூட்டணி அமைத்தால் என்ன தவறு என அவர் கேள்வி எழுப்பி இருக்கிறார். இது அரசியல் வட்டாரங்களில் புதிய விவாதங்களை கிளப்பி உள்ளன.

**கைக்கோர்க்கும் திமுக – அதிமுக?**

திமுக கூட்டணியில் இருந்து காங்கிரஸ், முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகள் வெளியேறி உள்ள நிலையில், திமுக எதிர்கால அரசியல் வியூகத்தை தீவிரமாக ஆராய்ந்து வருவதாக கூறப்படுகிறது. இப்படியான நிலையில், ஆர்.எஸ். பாரதியின் இந்த கருத்து வெறும் பேச்சா அல்லது எதிர்கால திட்டம் வெளிப்பட்டிருக்கிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மேலும், திருச்சி கிழக்கு உள்ளிட்ட பல தொகுதிகளில் இன்னும் சில மாதங்களில் இடைத்தேர்தல் நடைபெற க்கூடும் என பேசப்பட்டு வருகிறது. இந்த சூழலில், தவெகவை தனித்தனியாக எதிர்பதற்கு பதிலாக திமுக – அதிமுக ஒன்றாக எதிர்த்தால், அது தாக்கம் கூடுதலாக இருக்கும் என்பதால் இத்தகைய பேச்சுகள் நடந்து வருவதாக தெரிகிறது.

**முன்னால் இருக்கும் பெரிய கேள்வி**

ஆனால் இதனை இரு கட்சி தொண்டர்களும் எப்படி ஏற்றுக்கொள்வார்கள் என்ற மிகப்பெரிய கேள்வி முன்னால் வந்து நிற்கிறது. அதாவது, கிட்டத்தட்ட 60 ஆண்டுகளாக ஒருவரை ஒருவர் எதிர்த்து களத்தில் நின்றவர்கள், தற்போது திடீரென எப்படி ஒன்றாக இணைந்து செயல்படு வார்கள், இதனை அவர்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள் என்ற கேள்வி உள்ளது. இது கண்டிப்பாக ஆலோசிக்கப்பட வேண்டியவை.

**வரலாறு மாறுகிறதா?**

திமுக மற்றும் அதிமுக என இரண்டு தரப்பில் இருந்தும் இது தொடர்பான எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வரவில்லை என்றாலும் ஆர்.எஸ். பாரதியின் கருத்து குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. இது அவர் கொடுக்கும் ஒரு சிக்னலா என தொண்டர்களை சிந்திக்க வைக்கிறது. இருப்பினும், தமிழக அரசியல் களம் சந்தித்து வரும் தற்போதைய புதிய திருப்ப ங்கள், இங்குள்ள பாரம்பரிய அரசியல் போக்கையே தலைகீழாக மாற்றக்கூடும் என்பது மட்டும் தெளிவாகப் தெரிகிறது.

# வேலை வாய்ப்பு

## 12ம் வகுப்பு: திருச்சி, மதுரை விமான நிலையத்தில் வேலை! 62) காலியிடங்கள் சம்பளம் ₹22,500 வரை | தேர்வு இல்லை!




இந்தியாவில் விமான நிலையத் துறையில் அரசு சார்ந்த நிறுவனத்தில் வேலை பெற விரும்புபவர்களுக்கு அருமையான வாய்ப்பு கிடைத்துள்ளது. AAICLAS Assistant Recruitment 2026 அறிவிப்பை இந்திய விமான நிலைய ஆணையத்தின் கீழ் செயல்படும் AAI Cargo Logistics and Allied Services Company Limited (AAICLAS) அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. இந்த ஆட்சேர்ப்பின் மூலம் Assistant (Security) பதவிக்கான 62 காலியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

| Description | Details |
|---|---|
| வேலை பிரிவு | மத்திய அரசு வேலை 2026 |
| துறைகள் | இந்திய விமான நிலைய ஆணையம் சரக்கு லாஜிஸ்டிக்ஸ் மற்றும் அலைட் சர்வீசஸ் கம்பெனி லிமிடெட் |
| AAICLAS | AAI Cargo Logistics and Allied Services Company Limited |
| காலியிடங்கள் | 62 |
| பணி | Assistant (Security) |
| விண்ணப்பிக்கும் முறை | ஆன்லைன் மூலம் |
| கடைசி தேதி | 02.07.2026 |
| பணியிடம் | Trichy, Madurai, Tirupati, Bhubaneswar, Udaipur |
| அதிகாரப்பூர்வ இணையதளம் | https://www.aaiclas.aero/ |

விமான நிலைய வாரியாக பின்வருமாறு

| பணியிடம் | காலியிடங்கள் |
|---|---|
| திருச்சி (Trichy) | 23 |
| திருப்பதி (Tirupati) | 9 |
| மதுரை (Madurai) | 9 |
| புவனேஸ்வர் (Bhubaneswar) | 9 |
| உதய்பூர் (Udaipur) | 12 |
| மொத்தம் | 62 |

2026–க்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட கல்வி வாரியம் அல்லது கல்வி நிறுவனத்தில் இருந்து 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**மதிப்பெண் தகுதி:**

பொது பிரிவினர் (General) குறைந்தபட்சம் 60% மதிப்பெண்கள்

SC / ST பிரிவினர் குறைந்தபட்சம் 55% மதிப்பெண்கள்

மேலும் ஆங்கிலம், இந்தி அல்லது உள்ளூர் மொழியை படிக்கவும் பேசவும் தெரிந்திருக்க வேண்டும்.:

01.06.2026 தேதியின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் வயது 27 ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும். வயது தளர்வு உண்டு

| ஆண்டு | மாத சம்பளம் |
|---|---|
| முதல் ஆண்டு | ₹21,500 |
| இரண்டாம் ஆண்டு | ₹22,000 |
| மூன்றாம் ஆண்டு | ₹22,500 |

| | |
|---|---|
| விண்ணப்ப தொடக்க தேதி | 11.06.2026 |
| விண்ணப்பிக்க கடைசி தேதி | 02.07.2026 |

# ஐ.சி.எஃப்-ல் இருக்கை வந்தே பாரத் ரயில்கள் தயாரிப்பு நிறைவு!



சென்னை, ஜூன். 22–

சென்னை ஐசிஎஃப் ஆலையில் கடைசியான இருக்கை வந்தே பாரத் ரயில் தயாரிப்பு பணி அண்மையில் நிறைவடைந்தது.

இனி வரும் காலங்களில், தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில்கள் தயாரிப்பு முழுவீச்சில் நடைபெறவுள்ளன. அந்த வகையில், நடப்பு நிதியாண்டில் 8 தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரயில்கள் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# கத்தார் எரிவாயு ஆலையில் பயங்கர வெடிவிபத்து.. 54 பேர் படுகாயம் - 18 பேர் மாயம்!



கத்தார், ஜூன். 22–

கத்தாரில் அமைந்துள்ள எரிவாயு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 54 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். 18 பேர் மாயமாகி உள்ளனர். கத்தாரின் ராஸ் லபான் நகரில் அமைந்துள்ள பர்சான் எரிவாயு விநியோக ஆலையில் நேற்று (ஜூன் 21) இரவு இந்த பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

வெடிவிபத்தின் தாக்கத்தால் பல கிலோமீட்டர் தூரத்திற்கு அடர்ந்த கரும்புகை சூழ்நத்து. பல மணி நேரப் போராட்டத்திற்குப் பின் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. ஆலையின் உள்ளே ஏற்பட்ட இந்த விபத்தில் 54 தொழிலாளர்கள் கடுமையான தீக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாகக் கத்தார் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. மேலும் விபத்தின் போது ஆலைக்குள் இருந்த மேலும் 18 தொழி லாளர்கள் மாயமாகியுள்ளனர். மீட்புக் குழுவினர் ஆலையின் இடிபாடுகளுக்கு இடையே அவர்களை தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களால் இந்த ஆலை கடுமையாகச் சேதமடைந்து, பல வாரங்களாக மூடப்பட்டிருந்தது. உற்பத்தியை மீண்டும் தொடங்குவதற்காக பொறியாளர்கள் ஆலையைத் திறக்க முயன்ற போது ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே இந்த விபத்திற்கு காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த விபத்தில் நச்சு வாயுக்கசிவு எதுவும் பதிவாகவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நீட் மறுதேர்வுக்கான வினாத்தாளும் கசிவு?



புதுடெல்லி, ஜூன். 22–

கடந்த முறை நடந்த தவறு மீண்டும் நடந்து விடாமல் தடுக்க, மத்திய பாதுகாப்பு படை உதவியுடன் வினாத்தாள்கள் நாடு முழுவதும் முக்கிய நகரங்களுக்கு வந்து சேர்ந்தன. அரசு பொதுத்துறை வங்கிகளில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டன.

இந்த நிலையில் ரத்து செய்யப்பட்ட நீட் மறுதேர்வு நேற்று நாடு முழுவதும் நடைபெற்றது. இந்தியாவில் 551 நகரங்களிலும், வெளிநாடுகளில் 14 நகரங்களிலும் என மொத்தம் 5 ஆயிரத்து 440 தேர்வு மையங்களில் சுமார் 22.7 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். பிற்பகல் 2 மணிக்கு தேர்வு தொடங்கி நடந்தது.

**வீடியோவால் பரபரப்பு**


இந்த நிலையில், நீட் மறுதேர்வுக்கான வினாத்தாளும் கசிந்துள்ளது என்று வீடியோ ஒன்று வெளியானது. அந்த வீடியோவில், டெலிகிராமில் நீட் மறுதேர்வுக்கான வினாத்தாள், தேர்வு நடப்பதற்கு முன்பே கசிந்துள்ளது என்று தகவல் தெரிவித்தது. இது மாணவ மாணவிகள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எனினும், இது போலியானது என தேசிய தேர்வு முகமை, எக்ஸ் வலைதளத்தில் விளக்கம் அளித்துள்ளது.

**என்.டி.ஏ. விளக்கம்**

அதில், நீட் மறுதேர்வு விரிவான பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புடன் நடத்தப்பட்டது. அது வெற்றியும் அடைந்துள்ளது. நீட் மறுதேர்வு தொடர்பாக போலியான வீடியோ ஒன்று சமூக ஊடகத்தில் பரவி வருகிறது என்ற செய்தி எங்களுடைய கவனத்திற்கு வந்துள்ளது. அந்த வீடியோ போலியானது. அது கூறும் தகவலும் போலியானது என்று தெரிவித்து உள்ளது. இதுபோன்ற தவறான தகவல்களை தயாரித்து, உள்நோக்கத்துடன் பரப்பி விடு வது, மாணவர்களுக்கு மோசடி செய்வது அல்லது அவர்களுக்கு தவறான தகவலை பரப்பி விடுவது போன்றவை தீவிர குற்றம் ஆகும்.

பெற்றோர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அதிகாரப்பூர்வ வலைதளம் மற்றும் எங்களுடைய முகமையின் பரிசோதிக்கப்பட்ட சமூக ஊடகங்களின் தகவல்களை மட்டுமே பார்க்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது. இதன்படி, 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் அமைதியான மற்றும் வெளிப்படையான முறையில் நடந்த மறுதேர்வை எழுதியுள்ளனர் என்றும் தெரிவித்து உள்ளது.

# எம்.ஆர்.ஐ. எந்திரம் வாங்க கோரப்பட்ட டெண்டரில் ஊழல்?




தமிழ்நாடு சுகாதாரத்துறை சார்பில் 29 எம்.ஆர்.ஐ. எந்திரங்கள் வாங்க விடப்பட்டுள்ள டெண்டரில், இந்தியாவில் ரூ.5 கோடியில் கிடைக்கும் எம்.ஆர்.ஐ. எந்திரத்தை ரூ.7 கோடிக்கு வாங்க டெண்டர் கோரப்பட்டதாக சமூக வலைதளங்களில் தவறான தகவல் பரவி வருகிறது. இதனால் தமிழக அரசை பலரும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்து வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டு உள்ளதாவது:– இது முற்றிலும் தவறான தகவல். தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் அளித்துள்ள விளக்கத்தில், "தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 3 ஆண்டுகளுக்கு எம்.ஆர்.ஐ.கருவிகளை கொள்முதல் செய்ய 'ரேட் காண்டிராக்ட்' ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்றது. இதில் பிலிப்ஸ், சிமேன்ஸ் போன்ற பன் னாட்டு நிறுவனங்களுடன் செக்குயுயா என்ற இந்திய நிறுவனமும் பங்கேற்றது.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி சி.டி. எஸ்.கோ சான்றுடன் யு.எஸ். எப்.டி.எ./சி.இ. என்ற சான்றுகளும் உள்ள கருவிகள் மட்டுமே தேர்வு செய்யப்படமுடியும். யு.எஸ். எப்.டி.எ./சி.இ. சான்று தேவை என்ற நிபந்தனை, 2001–ம் ஆண்டிலிருந்து வாங்கப்பட்ட எல்லா எம்.ஆர்.ஐ. கருவிகளுக்கு தரம் மற்றும் மருத்துவப் பயனாளிகளின் பாதுகாப்பு அடிப்படையில் தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்டு வருகிறது

செக்குயுயா நிறுவனம் முன்மொழிந்த கருவிகளுக்கு யு.எஸ்.எப்.டி.எ./சி.இ. சான்று மற்றும் சில தொழில்நுட்ப குறிப்புகள் இல்லை என்பதால் அவை வல்லுனர் குழுவால் நிராகரிக்கப்பட்டன. இதை எதிர்த்து செக்குயுயா நிறுவனம் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடுத்த நிலையில், அந்த வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விதிகளை கடுமையாக்கிய ரெயில்வே!



சென்னை, ஜூன். 22

ரெயில் பயணத்தை பாதுகாப்பானதாகவும் பயணிகளுக்கு ஏற்றதாகவும் மாற்ற ரெயில்வே கடுமையான விதிகளை அமல்படுத்தி உள்ளது.

'ஜன் விஸ்வாஸ் சட்டம் 2026' மூலம் விதிகளை திருத்தி மத்திய அரசு அரசிதழ் வெளியிட்டுள்ளது.

அதன்படி ரெயில்களிலோ அல்லது ரெயில்வே வளாகங்களிலோ புகைப்பிடித்தல், அங்கீகரிக்கப்படாத முறையில் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் யாசகம் பெறுதல் ஆகியவை கடுமையான குற்றங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1989ஆம் ஆண்டு ரெயில்வே சட்டத்தின் பிரிவு 167இன் கீழ், புகைப்பிடித்தலுக்கான முந்தைய ரூ. 100 அபராதம் தற்போது ரூ. 2,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், ஒரு பயணி புகைப்பிடிக்கும்போது பிடிபட்டால், அந்தப் பயணியின் பயணச்சீட்டை உடனடியாக ரத்து செய்து, அடுத்த நிலையத்தில் இறக்கிவிட ரெயில்வே ஊழியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அபராதம் சம்பவ இடத்திலேயே செலுத்தப்படாவிட்டால், சம்பந்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார். அங்கு குற்றம் நிரூபிக்கப்பட்டால், அதிகபட்சமாக ரூ. 5,000 அபராதம் விதிக்கப்படலாம். பிரிவு 144 இன் கீழ், ரெயில்வே உரிமம் இல்லாமல் ரெயில்களில் சுற்றித் திரியும் பிச்சைக்காரர்களுக்கு முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கும் ரூ. 2,000 அபராதம் விதிக்கப்படும். அவர்கள் அபராதத்தைச் செலுத்தத் தவறினால், 3 மாதங்கள் வரை சிறைத்தண்டனை, ரூ. 5,000 அபராதம் அல்லது இரண்டும் விதிக்கும் வகையில் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

இந்த விதிகளை அவர்கள் நான்காவது முறை அல்லது அதற்கு மேல் மீறும்போது பிடிபட்டால், அவர்கள் குறைந்தபட்சம் 3 மாதங்கள் முதல் அதிகபட்சம் ஒரு வருடம் வரை சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும்.

# மிரட்டும் எதிரிகள்: பெண் அமைச்சர் ஆவேசம்!



சென்னை, ஜூன். 22–


'எதிரிகள் என்னை மிரட்டுகின்றனர் அதற்கெல்லாம் நான் பயப்படுகிற ஆள் இல்லை' என அமைச்சர் ஜெகதீஸ்வரி தெரிவித்தார்.

மிரட்டுவது தனிப்பட்ட நபரா, உட்கட்சியா, எதிர்க்கட்சியா என்று நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் ஜெகதீஸ்வரி கூறியதாவது: பெயர் சொல்லாமல் மறைமுகமாக மிரட்டுகிறார்கள்.

அதாவது எந்த நூதன முறையில் மிரட்டுகிறார்கள் என்றால் என் தொகுதியில், இந்த பிரச்னை, என் வார்டில் இந்த பிரச்னை என்று பொய்யான தகவல் சொல்கின்றனர். பொய்யான பெயர் சொல்லி பேசுகின்றனர். விசாரிக்கும் போது அதில் எந்த உண்மை தன்மை எதுமே இல்லை.

10 நிமிடங்களுக்கு ஒரு முறை போன் செய்து எனது பிரஷரை மிரட்டுகின்றனர். நீங்கள் என்ன நாங்கள் வந்து ஒரு தகவல் சொன்னா கேட்கவில்லை என வேண்டும் என்றும் சொல்கின்றனர். இது எதிர்க்கட்சி சூழ்ச்சி தான், வேண்டுமென்று எனது தொகுதியில் களங்கம் விளைவிக்கும் நோக்கத்தில் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஒருவர் போன் செய்து எங்களுக்கு பைக் வந்து பஞ்சர் ஆகிவிட்டது. பஞ்சர் கடை எங்கே இருக்கு என்று போன் செய்து கேட்டுவிட்டு நக்கலாக சிரிக்கிறாப்ள, இந்த மாதிரி தொந்தரவு செய்யும் வகையில் நிறைய போன் கால் வருகிறது.

மக்களுக்கு சேவை செய்ய விடாமல் தடுத்துகொண்டு வருகின்றனர். என்ன தடுத்தாலும் சோர்ந்து போகமாட்டோம். எங்களுக்கு எவ்வளவு தொந்தரவு கொடுக்கிறார்கள் என்று மக்களு க்கு தெரிய வேண்டும். எவ்வளவு தொந்தரவு கொடுத்தாலும் நாங்கள் மக்களுக்கு உழைப்பதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கிறோம். என்ன கஷ்டம் வந்தாலும் நான் தாங்கி கொள்வேன். இது குறித்து நான் எந்த புகார் மனுவும் அளிக்கவில்லை. இது என்னை வளர்த்துவிடுவதற்கு ஒரு வழியாக தான் நினைக்கிறேன். இதை நான் ஒரு குறையாக நினைக்கவில்லை. இவ்வாறு அமைச்சர் ஜெகதீஸ்வரி கூறினார்.




# ஜூன் 22, 2026 ஹாலிவுட், பாலிவுட், கோலிவுட் லேட்டஸ்ட் சினிமா அப்டேட்ஸ்!




**ஹாலிவுட்**

**'Toy Story 5' பாக்ஸ் ஆபிஸில் சாதனை!**

டிஸ்னிபிக்சார் தயாரித்த Toy Story 5 திரைப்படம் 2026–ஆம் ஆண்டின் மிகப்பெரிய ஓப்பனிங் வசூலை பதிவு செய்து உலகளவில் $312 மில்லியன் வசூல் செய்துள்ளது.

**ஹாலிவுட் பாக்ஸ் ஆபிஸ் மீண்டும் உச்சம்**

கொரோனா காலத்துக்குப் பிறகு ஹாலிவுட் தியேட்டர் வருவாய் மிகப்பெரிய வளர்ச்சியை கண்டுள்ளதாக புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

**'Legally Blonde' 25 ஆண்டு விழா**

Reese Witherspoon மற்றும் படக்குழுவினர் Legally Blonde படத்தின் 25வது ஆண்டு கொண்டாட்டத்தில் ஒன்று கூடியுள்ளனர்.

**பாலிவுட்**

**ஷாருக்கானின் 'King' படத்திற்கு எதிர்பார்ப்பு அதிகரிப்பு**

Shah Rukh Khan நடிக்கும் King திரைப்படம் 2026 கிறிஸ்துமஸ் வெளியீட்டை நோக்கி வேகமாக தயாராகி வருகிறது.

**சல்மான் கானின் 'Battle of Galwan' பேசுபொருள்**

Salman Khan நடித்துள்ள Battle of Galwan திரைப்படம் தேசபக்தி கதைக்களத்தால் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

**ஜான்வி கபூர் மீண்டும் சமூக வலைதளங்களில் ஆக்டிவ்**

இரண்டு வார இடைவெளிக்குப் பிறகு நடிகை ஜான்வி கபூர் சமூக வலைதளங்களில் மீண்டும் தோன்றியுள்ளார்.

**கோலிவுட்**

**'தலைவர் 173' படப்பிடிப்பு தொடக்கம்?**

Rajinikanth விரைவில் Thalaivar 173 படப்பிடிப்பில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**யஷின் 'Toxic' படத்திற்கு பெரிய அப்டேட்**

Yash நடித்துள்ள Toxic திரைப்படத்தின் ரிலீஸ் தேதி குறித்து புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

**பிரபுதேவா அதர்வா புதிய கூட்டணி?**

Prabhu Deva, நடிகர் அதர்வாவின் தந்தையாக புதிய படத்தில் நடிக்க இருப்பதாக தகவல்.


**'ஜீவா' டீசரில் முதல்வர் விஜய் ரெஃபரன்ஸ்**

Vijay குறித்த குறிப்புகள் இடம்பெற்ற டீசர் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

**சமந்தா குறித்து புதிய வதந்தி**

Samantha Ruth Prabhu–வின் சமீபத்திய தோற்றம் சமூக வலைதளங்களில் பல்வேறு விவாதங்களை கிளப்பியுள்ளது.

# உலகின் மிகப்பெரிய நிலத்தடி வெப்ப ஏரி கண்டுபிடிப்பு!



உலகின் மிகப்பெரிய நிலத்தடி வெப்ப ஏரியை தெற்கு அல்பேனியாவில் விஞ்ஞா னிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அல்பேனியாவில் உள்ள அட்டோமஸ் குகைக்குள் உலகின் மிகப்பெரிய நிலத்தடி வெப்ப ஏரி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஏரி 138 புள்ளி 3 மீட்டர் நீளமும், 42 மீட்டர் அகலமும் கொண்டது, மேலும் 345 மீட்டர் சுற்றளவு கொண்டது. இது 8 ஆயிரத்து 335 கன மீட்டர் வெப்ப கனிம நீரைக் கொண்டுள்ளது, இது ஒரு அசாதாரண இயற்கை அதிசயம் என கூறுகின்றனர் விஞ்ஞானிகள். 25 அடி ஆழம் கொண்ட இந்த ஏரியில், 2.9 லட்சம் கன அடி கனிமங்கள் நிறைந்த 79 டிகிரி வெப்பமான நீர் உள்ளது. இந்த ஏரியை முதன் முதலில் 2021–ம் ஆண்டு செக் குடியரசின் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். ஆனால் அதன் முழு அளவை மதிப்பிடுவதற்கான உபகரணங்கள் இல்லாத நிலையில், தற்போது 3D ஸ்கேனர்களுடன் விஞ்ஞானிகள் மிகப்பெரிய நிலத்தடி வெப்ப ஏரியை கண்டுபிடித்துள்ளனர். லேக் நியூரோன் என்ற இந்த ஏரியின் அளவை ஆய்வாளர்கள் தற்போது உறுதி செய்துள்ளனர். 34,450 சதுர அடி பரப்பளவு, 25 அடி ஆழம் கொண்ட இந்த ஏரியில், 2.9 லட்சம் கன அடி கனிமங்கள் நிறைந்த 79 டிகிரி வெப்பமான நீர் உள்ளது.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020